[1978 மார்ச் 28

சேலம் கலைக்கல்லூரி

*688 வினு.— திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் கலைக்கல்லூரியில் 3 ஷிப்ட் நடப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மாணவர்கள் படிக்கிறுர்கள்?

(இ) இதைக் குறைத்து கல்லூரி நடக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(ஆ) பகல் நேரக் கல்லூரியில் 2,480 மாணவர்களும் மாலை நேரக் கல்லூரியில் 540 மாணவர்களும்' படிக்கின்றனர்.

(இ) ஆம். எடுத்துள்ளது.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவரவர்களே தமிழகத்திலே இதுவரை 3 கல்லூரிகள் நூற்றுண்டு விழா கண்டிருக்கின்றன. அதிலே, நான் படித்த மாநிலக் கல்லூரியும் ஒன்று. அதற்கடுத்து, நூற்றுண்டு விழா காணப்போவது சேலம் கலைக்கல்லூரி. இந்த சேலம் கலைக்கல்லூரி, தொழிற்சாலைபோல இயங்குவதாலேயும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தாலேயும், போதிய கட்டிட வசதியில்லாத காரணத்தாலும், அங்கே இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா? அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? நூற்றுண்டு விழாவை முன்னிட்டு அக்கல்லூரியில் மெம்மோரியல் ஹாலும், நூலகமும் அமைக்க மானியம் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அடுத்த ஓராண்டுதான் பி.யூ.சி. கல்லூரியிலே இருக்கப்போகிறது என்ற காரணத்தாலே, அதற்கடுத்த ஆண்டிலேயிலிருந்து அந்த நிலைமை சரிப்பட்டுவிடும். மற்ற கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும்.